9

Register No. 

# முழு ஆண்டுத் தேர்வு – 2024

காலஅளவு : 2.30 மணி நேரம்

## தமிழ்

மதிப்பெண்கள் : 100

### பகுதி - I

I. **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 15 x 1 = 15

1. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தாமணி – அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு

   அ) வேற்றுமைத் தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

2. மிசை என்பதன் எதிர்ச்சொல் என்ன?

   அ) கீழே ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

3. பொருந்தாத இணை எது?

   அ) ஏறுகோள் – எருதுகட்டி ஆ) திருவாரூர் – கரிக்கையூர் இ) ஆதிச்சநல்லூர் – அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் – பட்டிமண்டபம்

4. தீரா இடும்பை தருவது எது?

   அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம் இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை

5. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

   அ) தேசிய திறனாய்வுத் தேர்வு ஆ) ஊரகத் திறனாய்வுத் தேர்வு இ) தேசிய திறனறி, கல்வி உதவித்தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

6. குடும்ப விளக்கு என்ற நூலின் ஆசிரியர்

   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கம்பர் ஈ) திருவள்ளுவர்

7. இந்திய தேசிய இராணுவத்தை..........இன் தலைமையில்..........உருவாக்கினார்.

   அ) சுபாஷ்சந்திரபோஸ், இந்தியர் ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர் இ) மோகன்சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்

8. முண்டி மோதும் துணிவே இன்பம் – இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது

   அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு இ) துணிவு ஈ) மருட்சி

9. "அதிரப் புகுதக் கனாக் கண்டேன்" – யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?

   அ) கண்ணன் கனவில் ஆண்டாள் புகுந்தாள் ஆ) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள் இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள் ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

10. யா மரம் என்பது எந்த நிலத்தில் வளரும்?

    அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) பாலை ஈ) நெய்தல்

11. இயமத்துக் கோடு உயர்ந்தன்ன – இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

    அ) கொம்பு ஆ) மலையுச்சி இ) சங்கு ஈ) மேடு

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக

நேக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே.

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?

அ) பெரிய புராணம் ஆ) யசோதர காவியம் இ) ஒளியின் அழைப்பு ஈ) குடும்ப விளக்கு

13. இப்பாடலின் ஆசிரியர்

அ) லாவோட்சு ஆ) ந. பிச்சமூர்த்தி இ) பெயர் அறியப்படவில்லை ஈ) காரியாசான்

14. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைகளை எடுத்து எழுதுக.

அ) ஆக்குவது – அறத்தை ஆ) போக்குவது – நோக்குவது இ) ஏதெனில் – காக்கவே
ஈ) நோக்குவது – ஞானம்

15. வெகுளி என்பதன் பொருள் யாது?

அ) நற்செயல் ஆ) அறிவு இ) நன்னெறி ஈ) சினம்

**பகுதி - II (மதிப்பெண்கள் 18)**

**பிரிவு – 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** **4 x 2 = 8**
**(21 – ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.

அ) மனிதவாழ்வின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம்

ஆ) உலகச் சுற்றுச்சூழல் நாள் கொண்டாடப்படுவது ஜுன் 5.

17. கண்ணி என்பதன் விளக்கம் யாது?

18. பகுத்தறிவு என்றால் என்ன?

19. "டெல்லி நோக்கிச் செல்லுங்கள்" என்ற முழக்கம் யாரால் எப்போது செய்யப்பட்டது?

20. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?

21. "தலை" என முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** **5 x 2 = 10**

22. இடிகுரல், பெருங்கடல் – இலக்கணக் குறிப்பு தருக.

23. கலைச்சொற்களை எழுதுக. அ) Hero Stone ஆ) Personality

24. மரபு இணைச்சொற்களை தொடரில் அமைத்து எழுதுக.

அ) கண்ணும் கருத்தும் ஆ) நகமும் சதையும்

25. அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

26. வல்லினம் மிகும் இடங்களுக்கு – ஏதேனும் இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

27. வீணையோடு வந்தாள், கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.

28. பிழைநீக்கி எழுதுக.

அ) நல்ல தமிழுக்கு எழுதுவோம்.

ஆ) குழலியும் பாடத் தெரியும்.

## பகுதி - III பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

29. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.

30. பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் சிற்பக்கலை பற்றிய குறிப்பு காணப்படுகிறது. போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும். அக்கல்லில் அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும். தமிழரின் தொடக்ககாலச் சிற்பக்கலைக்குச் சான்றாக இதையும் குறிப்பிடலாம். சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்குச் சிலைவடித்த செய்தி இடம் பெற்றுள்ளது. மாளிகைகளில் பல சிற்பங்களில் சுண்ணாம்புக் கலவை (சுதைச் சிற்பங்கள்) இருந்ததை மணிமேகலை மூலம் அறிய முடிகிறது.

**வினாக்கள் :**

1. தமிழின் மிகத் தொன்மையான இலக்கணநூல் எது?
2. நடுகல் யாருக்கு நடப்படும்?
3. கண்ணகிக்கு சிலை வடித்த செய்தி எந்த காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது?

## பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி. (34– கட்டாய வினா)** **2 x 3 = 6**

32. நிலைத்த புகழைப் பெறுவதற்கு குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

33. நாம் கடைபிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை?

34. ‘‘தித்திக்கும் தெள்ளமுதாய்’’ எனத் தொடங்கும் தமிழ்விடுதூது பாடலை அடிபிறழாமல் எழுதுக. **(அல்லது)**
‘‘பூவாது காய்க்கும்’’ எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலப் பாடலை எழுதுக.

## பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

35. கைபிடி, கைப்பிடி – சொற்களின் பொருள் வேறுபாடுகளையும், அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

36. உருவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை – இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு தருக.


## பகுதி - IV (மதிப்பெண்கள் 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5 x 5 = 25**

38. தூது அனுப்பத் தமிழே சிறந்தது – தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக. **(அல்லது)**
வாழ்க்கைப்போரில் வெற்றி பெறுவதற்கான வழிகளைக் கமுகு மரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?

39. உங்கள் பள்ளி நூலகத்திற்கு தமிழ்–தமிழ்–ஆங்கிலம் என்னும் கைபடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவு அஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக. **(அல்லது)**
உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் ‘‘கால் முளைத்த கதைகள்’’ என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. பாநயம் பாராட்டுக.

கல்லும் மலையும் குதித்து வந்தேன் – பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி – எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்
ஏறாத மேடுகள் ஏறி வந்தேன் – பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் – மணல்
ஓடைகள் பொங்கிட ஓடி வந்தேன்.

– கவிமணி

42. மொழிபெயர்க்க :

A deer, a turtle, a crow and a rat were friends. One day the deer was caught in a hunter's trap. Friends made a plan to save him. According to the plan, the deer lay motionless as if it were dead. The crow sat on the deer and started poking. The turtle crossed the hunter's path to distract him. The hunter left the deer, assuming it dead, and went after the turtle, Meanwhile, the rat chew open the net to free the deer. The crow picked up the turtle and quickly look it away from the hunter. From this Panchatantra story, we learn that the team work can achieve great results. **(அல்லது)**

பள்ளியிலும், வீட்டிலும் நீ கடைபிடிக்க வேண்டிய செயல்களை எழுதுக.

## பகுதி - 5

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3 x 8 = 24**

43. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**
நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

44. "தாய்மைக்கு வறட்சி இல்லை" என்ற சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.
**(அல்லது)** "தண்ணீர்" கதையைக் கருப்பொருள் குன்றாமல் எழுதுக.

45. 'எனது பயணம்' என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக. **(அல்லது)**
நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக.